உ

# அருள் ஒளி



மாசி
இதழ்

மலர்
66

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை

2009

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
# நினைவாலயத் திறப்புவிழாக் காட்சிகள்
# 07.01.2009




சிவத்தமிழ்ச்செல்வி
நினைவாலயத்தை
ஆன்மிக அன்பர்
ரிஷி தொண்டுநாதன் அவர்கள்
திறந்து வைத்தார்.

அன்னையின் திருவுருவச்
சிலையினை
திரு. கந்தையா நீலகண்டன்
அவர்கள்
(கௌரவ செயலர் –
அகில இலங்கை
இந்துமா மன்றம்)
திறந்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்:
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

**2008 சர்வதாரி வருடம் மார்கழி**

**மலர் 66**

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை, பதிவு இல. **QD/74 NEWS/2006Y**



UTHAYAN PUBLICATIONS
361, KASTHURIYAR ROAD,
JAFFNA
SRI LANKA
09/04/04


## "இந்துசாதனம்" நித்தம் மலர வாழ்த்துவோம்

நல்லைநகர் நாவலர் பெருமானின் சிந்தனையில் எழுந்த கருத்தின் விளைவே "இந்துசாதனம்". பத்திரிகை உதயமாவதற்குக் காரணம். 1889ஆம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்தாறாம் திகதி இந்துசாதனம் உதயமாகியது. ஈழத்து இந்துசமயச் செய்திகளை உலகறிய வைப்பதில் தலையாய பங்களிப்பினை கடந்த நூறு ஆண்டுகளுக்குமேல் சீராகச் செய்து வந்தமை மறக்க இயலாது. இந்துசாதனம் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களை விழிப்படையச் செய்த உன்னத ஏடாக மதிப்புப் பெற்றது. பிற மதத்தவர்கள் சைவசமத்தவர்களை பிரசுரங்களால் ஏளனம் செய்தபோது நாகரிகமாக பதில் கூறி அவர்களை தலை குனிய வைத்தது. வேள்வி என்ற பெயரால் எங்கள் ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலி நடைபெற்று இரத்தக் காட்சிகளோடு பக்தர்கள் கூடிய கோவிலை புனிதப் படுத்துவதில், கொல்லாமையை நிலைநிறுத்துவதில் இந்துசாதனம் சாதனை படைத்தது. இந்து சமயத்தின் பெயரால் ஊரெல்லாம் கல்விச் சாலைகள் எழுவதற்கு ஊக்குவித்தது. சைவ மாநாடுகளை தோற்றுவிப்பதிலும், மாநாட்டுப் பேராளர்களை பெருமைப் படுத்துவதிலும் மாநாட்டுக் கருத்தினை மக்களிடம் சேர்நத்து மறுமலர்ச்சியை உருவாக்குவதிலும் இந்துசாதனத்தின் தொடர் பங்களிப்பு எல்லையற்றது. தமிழிலும், ஆங்கிலத்திலும் பலரும் வியக்க அரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை அற்புதமாக வெளியிட்டு எமக்குப் பெருமை தந்தது. இந்து சாதனத்தின் பிறப்பிற்காக எத்தனை எத்தனை பெரியவர்கள் தங்களை அர்ப்பணித்தனர் என்பதை வரலாறு எடுத்தியம்புகின்றது. சைவ பரிபாலனசபையின் மேன்மை இந்துசாதனத்தால் நிலைபெற்றதை யாரும் மறுக்க முடியாது. வரலாறு கண்ட இந்துசாதனத்திற்கு எங்கள் தவக்குறைவால் தளர்வுகள் எற்பட்டது. இது மிகவும் கவலைக்குரியது. சைவ பரிபாலனசபையின் முதுசமான சைவப்பிரகாச அச்சு இயந்திரசாலை மூடப்பட்டது. இந்துசாதனம் செயற்கைச் சுவாசிப்பில் உயிர் வாழ்வதும், ஓய்ந்திருப்பதும் தொடர்ந்தது. திடீரென மீளவும் நடமாடியது. பேராசிரியர் இரா. குமாரவடிவேல் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தன்னை தன் சரித்திரத்தை எடுத்துரைத்த வண்ணம் நிமிர்ந்தது. மீண்டும் ஓய்ந்தது. இன்று மீளவும் அழகுக் கோலத்தில் அனுபவம் நிறைந்த ஆசிரிய பிரான் சிற்பி சிவ. சரவணபவன் அவர்களின் ஆளுமையில் தைப்பொங்கலில் மலர்ந்துள்ளது. சைவ பரிபாலனசபையின் இன்றைய நிர்வாகிகளே! மிக்க நன்றி. இந்துசாதனம் எழுந்து நடமாட வைத்துள்ளீர்கள். இந்துசாதனம் மலர இமைப் பொழுதும் துணை செய்யுங்கள். இந்துசாதனத்தைப் பொறுத்தவரை இறவாப் பெருமை உடைய ஏடு. நூற்றாண்டு கண்ட அரிய சொத்தினை அரணாக நின்று காத்திடுங்கள். எத்தனை இந்து சஞ்சிகைகள், மலர்கள் எழுந்தாலும் இந்துசாதனமே ஈழத்து இந்துக்களின் பிரசுரக் கருவறை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆதலால் எம் மண்ணில், எம் சமய வாழ்வில் மூல ஏடாக மதிக்கப்படும் இந்துசாதனம் என்றும் மலர அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

– ஆசிரியர்


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள்**

**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்துக்கு ஒப்புதல் தாருங்கள்.**




தொடர்புகளுக்கு,
ஆறு. திருமுருகன்
தொலைபேசி
021-22 6550

கண் வைத்திய நிபுனர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr . சிவந்தா, 021- 222 3149
யாழ் போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகளின் அருள் அமுத வாக்குகளை உளங்கொள்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

**சி**வயோக சுவாமிகள் இறைவனை அடைவதற்குரிய வழிகளாக நால் வகை யோக நெறிகளையும், சரியை, கிரியை முதலிய சைவ நாற் பாதங்களையும் குறிப்பிட்டுள்ள போதும் இன்றைய தலைமுறையினருக்கு மிகவும் ஏற்றதாக அவர் வற்புறுத்துவது பக்தி நெறியையே என்பது சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் இருந்து அறியமுடிகிறது.

திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர்களும், திருமூலர் முதலிய ஞானிகளும் பக்தி நெறியையே எம்போன்ற பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த வழி என்று கூறியுள்ளார்கள்.

பக்திநெறி என்பது அன்புநெறி. இறைவன் மீது பக்தி செலுத்துவது இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் மீதும் அன்பு செலுத்துவது எல்லாப் படைப்புக்கள் மீதும் கரிசனை கொள்வது, அவற்றைப் பாதுகாப்பது, அவற்றிற்கு துன்பங்களையோ தொல்லைகளையோ தராமலிருப்பது; "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்;" என்ற உயரிய கோட்பாட்டைச் செயற்பாடு ஆக்குவது; "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என வாயார வாழ்த்துவதோடு வாழ்ந்தும் காட்டுவது என்பன பக்தி நெறி இலக்கணங்களுள் சிலவாகும்.

கடவுளை உள்ளன்போடு நினைந்து வழிபட்டு, திருநீறணிந்து, உருத்திராக்கம் தரித்து, திருவைந்தெழுத்தோதி, குருபாதம் பணிந்து, பக்தி நெறியில் நிற்க ஈசன் எந்தை இணையடி நீழலில் வாழும் பேரின்ப வாழ்வு கிடைக்கும் என்பது சைவநெறி காட்டும் பாதையாகும்.

பக்திநெறியில் நிற்பவரின் பழ வினைகள் பாறும் வண்ணம், சித்த மலம் அறிவித்து சிவமாக்கும் தன்மை பக்திக்கு உண்டு என்பர் மணிவாசகப் பெருமான் "பக்தி வலையில் படுபவன் இறைவன்" என்பர் அருளாளர்.

பக்திநெறியில் உண்மை யுண்மையாக நின்று ஒழுகுபவர்களிடம், சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம், பணிதல், உண்மை, நேர்மை, நீர்மை முதலிய தெய்வீகக் குணங்களும்; பசித்து வருவோர்க்கு உணவளித்தல், வாயுற வாழ்த்தல் தன்னைப்போல பிறரையும் பேணுதல் பண்புடன் வார்த்தை யாடல், ஆசைகளை ஒழித்தல், பிறரின் வேதனை தீர்த்தல் கோததிரங்குலமெனும் கோட்பாடொழித்தல், மனதை அடக்குதல், புலன்களை அடக்குதல் முலிய நற்குண நற்செய்கைகளும் நிலை கொண்டிருக்கும். இவ்வாறு சிவயோகசுவாமிகள் குறிப் பிடுகிறார்,

***"கொல்லாமை கள்ளாமை வேண்டும்***
***கோபம், பொறாமை கொள்ளாமை வேண்டும்***
***எல்லார்க்கும் அன்பு செய்ய வேண்டும்***
***நல்லாரிணக்கமே வேண்டும்***
***நடுநிலைமை மாறாதிருக்க வேண்டும்"***

எனவும்

***"காலையும் மாலையும் கடவுள் பாதத்தை***
***சாலவே தொழுவார்கள் இன்பமே"***

எனவும்

***"அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்***
***பஞ்சாட்சரத்தை நெஞ்சின் துஞ்சாமலே செபி"***

எனவும் அமையும். சிவயோகசுவாமிகளின் அருட் கூற்றுக்கள் உள்ளங் கொள்ளற் பாலன. நற்குண நற்செய்கைகளும்; காலை, மாலை கடவுளைத் தியானித்தல், நாமங்களைச் செபித்தல், திருமுறைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுதல், சமூகத் தொண்டு மற்றும் சைவ ஒழுக்கம், ஆசார சீலங்களை தவறாது மேற்கொள்ளல் என்பனவும் பக்தி நெறியின் பாற்பட்டனவாகும். இவ்வாறு இறைவனை அடையும் வழிகளுள் பக்தி நெறியையே சுவாமிகள் பெரிதும் வியந்தும் போற்றியும் பேசுகின்றார். பக்தி நெறி ஒழுக்கங்கள் எம்மைப் படிப்படியாக ஆன்மீக வாழ்வின் உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் என்பது சிவயோக சுவாமிகள் தரும் நற் செய்தியாகும்.

ஞானத்தால் தொழுதல் ஞானியர்க்கே இயலும். சாதாரண மக்களே பெரும்பான்மையினர். அவர்களுக்கு ஞானத்தால் இறைவனைத் தொட இயலாது. பக்தி நெறி ஒன்றே எல்லோர்க்கும் பொதுவானதாயும் இயலக் கூடியதாயும் உள்ளது. தமிழ், பக்தி மொழி, அன்பு மொழி என்ற சிறப்பையும் பெற்றுள்ளது. பண்ணோடு இசைபா இறைவனை வழுத்துதல் பக்திநெறியின் அங்கமாகும்.

சிவயோக சுவாமிகளும் பக்தி நெறியாம் அன்பு நெறியேதாம் உயர்ந்த நெறியெனக் குறிப்பிட்டு எல்லோரையும் உய்விக்கும் ஆன்ம ஈடேற்றம் பெறச் செய்யவும் ஏற்ற நெறி பக்தி நெறியெனக் காட்டி அவர்களையும் வழிப்படுத்தியுள்ளார்.

***"அன்பே கடவுள் அன்பே உலகம்***
***அன்பே உயிர்கள் அன்பே அனைத்தும்"***

என்னும் சிவயோக சுவாமிகளின் அருளமுத வாக்கினை உளங்கொண்டு வளம்பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

### அருள்ஒளி

**துர்க்கை யம்மனருள் செவ்வாய்**
**கினிய அருள்ஒளிச் சக்தி**
**கார்த்திகைப் பெண்களாய் யுதித்தன**
**அவள் அறுவகைச் சக்திகள்**
**கதிர்விடும் ஞானச்சுடர் வேலே**
**அவளளித் தருள்புரிந்த சக்தி**
**காத்திடுவான் கந்தன் கருணை**
**யருள் விளங்கக் காண்பீர்**

### ஸ்ரீ துர்க்கை அம்மன் புகழ்

**ஊராம் உழுகொடையில் உருக்கொண்ட**
**திரிசூலம் தரித்த சிவமகா காளி!**
**நாரனனின் சக்திகளையும் தன்னுள்**
**ஏற்று சங்கு சக்கரமுமேந்தி**
**பாரினைக் காக்கும் பரந்த அருள்**
**துலங்க பராசக்தியில் பல்வேறு - அவ**
**தாரங்களையெல்லாம் ஒன்றாக்கி**
**மஞுவாள் கதமும் கொண்டு**
**பூரனை யொளிபரப்பும் ஸ்ரீதுர்க்கை**
**யம்மன் புகழ் தொன்மையுணர்த்தும்**

**இராமஜெயபாலன், கொக்குவில்**

### முத்திக்கு வழிகள் சைவ நாற்பாதங்கள்

**சரியை கிரியை யோகம் ஞானம்**
**சாதனம் நான்கும் வாய்த்த வழிகள்**
**அரிய ஆத்மீ கவாழ்வு அரும்பி**
**பெரிய காயாய் கனிந்த நிறைவுற**
**குரவர் நால்வர் கொண்ட மார்க்கம்**
**குறித்த அவைதான் ஒவ்வொன் றாகும்**
**பரமுத் திபெற்று பேரின் பத்தை**
**பாரோர் அடையப் பாதைகள் இவையே.**

### இனிமையாக வாழ வேண்டும்

**எண்ணம் உயர்ந்த தாக வேண்டும்**
**எதிலும் எளிய தன்மை வேண்டும்**
**தன்னைப் பிறரை வாழ வைக்கும்**
**தன்மை உடைய வாழ்வு வேண்டும்**
**அன்னை போல இரக்கம் வேண்டும்**
**அடக்கம் ஒழுக்கம் பண்பு வேண்டும்**
**இன்சொல் அன்பு என்றும் வேண்டும்**
**இனிமையாக வாழ வேண்டும்**
**என்றும் இறைவனை நம்ப வேண்டும்**
**எல்லாம் அவனென் றெண்ண வேண்டும்**

**கவிஞர். வ. யோகானந்தசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாக்கதை தோற்றிய பெருங்கதை

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முன்னொரு ஞான்று முனிவர் உபமன்யு என்பார் திருக்கயிலாய மலைச் சாரலில் அமர்ந்திருந்தார் முனிவர், அவன் அருளே கண்ணாகக் காணில் அல்லால் இத்தன்மையர் என்று எவராலும் அறிய வொண்ணாத சிவபெருமானை சிந்தையில் வந்தித்த வண்ணமிருந்தார்

கன்னலைத் தேனைக் கனியின் இன்சுவையை அமுதை உணர்வால் அனுபவித்து இன்புற்றிருந்தார்.

உபமன்னிய முனிவர் கண்ணபிரானுடைய முடிமேல் கழலடி வைத்தவர். முனிவர் ஒப்பற்ற சிவ தொண்டிற்கு ஒப்புமை இல்லாதவர். உபமன்னிய முனிவர் பாலகனாக இருந்த நாளில் பால் உண்ண விரும்பி பதை பதைத்து பரிந்தழுதார். பரம்பொருள் பாற்கடலையே பரிவுடன் ஈந்தருளினார்.

உபமன்னிய முனிவரைச் சூழ்ந்து சுத்த யோகிகள் குழுமியிருந்தார்கள். அப்போது வானில் பேரொளி ஒன்று தோன்றியது. அவ்வொளி ஆயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று பிரகாசித்தது. உபமன்னிய முனிவர் பேராளியை ஆரக்கண்டார். இருக்கையை விட்டு எழுந்து நின்றார். பேரொளியைப் பேணித் தமது இரு கரங்களைக் கூப்பிக் கும்பிட்டார். சூழ்ந்திருந்த சுத்தயோகிகள் உபமன்னிய முனிவருடைய செயலைக் கண்டு ஆச்சரியம் கொண்டார்கள். முனிவரைப் பார்த்துப் பணிவோடு,

“மகாதேவருடைய மலரடிகளை அல்லாமல் வணங்காத மாதவரே! வானில் தோற்றும் சோதியைப் பார்த்துத் தொழுவது எதன் பொருட்டாகவோ?” என்று அந்தணர்கள் தாம் கொண்ட ஐயத்தை வினாவினார்கள்.

“நம்பியாரூரன் என்னும் நாமத்தான் நாம் தொழும் தன்மையான் அவன் சிவ பெருமானால் உள்ளம் நிறையப் பெற்ற உத்தமன்” என்று அம்மாமுனிவர் அவ்வொளியை தாம் வணங்குவதற்குரிய காரணத்தை மிக இரத்தினச் சுருக்கமாக முனிவர்களுக்கு மொழிந்தருளினார்.

“மாதவரே! பெருமைக்குரிய ஒளி உடையாராகிய அவர் ஆற்றிய தூய தவ விபரத்தை அறியும் ஆவல் கொண்டுள்ளோம். எங்களுக்கு என்னதை அருளிச்செய்ய வேண்டும்” என்று முன்னின்று குறை இரந்து யோகியர்கள் விண்ணப்பம் செய்தார்கள்.

உபமன்னிய முனிவர் உயர் தவத்தோர் உணர உரைத்தருளுகின்றார்.

“திருக்கயிலையில் ஒரு அணுக்கத் தொண்டர் இருந்தார். அவர் கங்கை தரித்த வேணியராகிய சிவபெருமான் அணிந்து கொள்ளும் மலர் மாலையும், திருநீற்றையும் எடுத்துக் கொடுக்கும் தொண்டராவார். ஆலால சுந்தரர் என்பது அவர் பெயர்.

முன்னொரு நாளில் ஆலால சுந்தரர் சிவபெருமான் அணிவதற்கான மது மலர்களைக் கொய்வதற்கு எண்ணினார். ஆலாலசுந்தரர் திருநந்தன வனத்தை நண்ணினார்.

ஆலாலசுந்தரர் பூந்தோட்டத்தில் புகுவதற்கு முன்னராகவே சேடியர் இருவர் மணமலர் பறிப்பற்கு நந்தனவனத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் முழு மதிபோன்ற முகப்பொலிவு உள்ளவர்கள். பொங்கி எழும் பூரித்த அழகினை உடையவர்கள்.

பூவையர் போன்ற சேடியர் இருவரும் உமாதேவியாருடைய ஏலவார் பூங்குழற்கான பூக்களைக் கொய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புமிக்க அச்சேடியர்கள் அணிந்திதை, கமலினி என்னும் பெயருடையவர்கள், பூங்கொம்பர்களினின்றும் அன்றலர்ந்த துன்று மலர்களை நன்று நாடிப் பறித்தார்கள்.

அந்தவேளையில் தேவதேவராகிய சிவபெருமான் திருவருளாக வந்து, பெருந்தவம் செய்த தென்திசைத் தேசம் வாழ்வடையவும். தீதற்ற திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம் தரவும் ஆலாலசுந்தரர் அச்சேடியர்கள் மீது மனதை அலைபாயவிட்டார். சேடியர்களும் அன்புருடைய அன்புக் காட்சியில் கண்ணினார்கள். கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல" (1100) என்பது பொய்யாமொழி.

அச்சம்பவத்தைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் அள்ளிச் சொரியும் செந்தமிழ் அழகு இது.

***மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்***
***தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்***
***போது வாரவர் மேல்மனம் போக்கிடக்***
***காதல் மாதரும் காட்சியிற் கண்ணினார். (35)***

ஆலாலசுந்தரர் திருநந்தன வனத்தினின்றும் புறப்பட்டார். வண்டுணாப் புதுமலர்கள் இறைவனுக்குப் பொருந்து மென கொய்து சென்றார். அன்னம் அன்ன அழகிய ஆயிழைமார்களும் அம்மை யாருக்கான அன்றலர்ந்த நறுமணங் கமழும் மலர்களை ஆய்ந்து எடுத்துச் சென்றார்கள்.

சிவபெருமான் ஆலாலசுந்தர ருடைய அலைபாயும் மனக்கருத்தைத் திருவுளங் கொண்டார்.

"ஆலாலசுந்தரனே! நீ அழகிய பெண்கள் மேல் மனம் பேதலித்தாய் ஆதலால் தென்திசையில் சென்று அவ தரிப்பாய். நீ, அங்கு மனங் கொண்ட மங்கையரை மணந்து காதலின்பம் கலந்து இங்கு அணைவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆலாலசுந்தரர் கருணைக் கடலின் கட்டுரை கேட்டு மனம் மறுகினார். கண்கள் கலங்கினார். கைகளை அஞ்சலியாகக் குவித்துக் கொண்டார். பின்வருமாறு வாய் விண்டார்.

"எம்பெருமானே! தம்பிரான் தாள்கள் அல்லால் தரிப்பிடம் ஒன்று இல்லேன். செம்மைபோகிய திருவடிகளை பிரிந்து இங்கிருந்தும் நீங்கும் சிறுமையுடைய னாயினேன் மானிடப் பிறப்பில் மயங்கி மகாதேவரை மறந்துவிடுவேன். மண்ணுலகில் மயங்காமல் தெண்ணிலா அணிந்த வேணியினாய்" என்னைத் தடுத்து ஆண்டு அருளவேண்டும்.

அந்நிகழ்வினைத் தொண்டர் சீர் பரவுவார் அண்டரும் அறிந்து இன்பம் கொண்டிட எடுத்துப் பாடுகின்றார்,

***கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்***
***செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்***
***மையல் மானிட மாய்மயங் கும்வழி***
***ஐய னேதடுத் தாண்டருள் செய்யென. (36).***

கருணைக் கடலான கைலாசபதி அணுக்கத் தொண்டருடைய குறையை நிறைவாக்க அருள் புரிந்தார்.

இறைவனுடைய ஆஞ்ஞைப்படி நம்பியும் நங்கைமாருடன் தென்திசையில் மானுடப் பிறவியில் பிறந்தார். பெண்களோடு கூடிப் பெரிதும் இன்பம் துய்த்தார். இப்போது சிவபெருமானுடைய அருள் ஆணையினால் மீண்டும் திருக்கயிலாயத்தைச் சாருகின்றார். என்று உபமன்னிய முனிவர் சூழ்ந்திருந்த சுத்தியோகிகள் விளங்கும்படியாக ஆலாலசுந்தரருடைய விருத்தாந்தங்களை எல்லாம் எடுத்து விபரமாக விரித்து விளம்பினார்.

அவற்றை எல்லாம் அன்போடும் ஆவலோடும் அமைதியாக ஒரு முகச் சிந்தனையோடும் இருந்து கேட்டறிந்த அந்தணர்கள் பின்னொன்று வினாவு கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திசை எட்டினும் தென்திசை மேலானதாகச் செய்த மாதவம் தான் யாதோ?"

உபமன்னிய முனிவர் சொல்வார். தேசங்களை எல்லாம் விளக்கம் செய்த இறைவனுடைய திருத்தோணிபுரம் முதலாகச் சிவபூசைக்குப் பொருந்தும் இடம்பல. திசைகளுடைய தாரதம்மியங்களை ஆராய்ந்து சீர்தூக்கினால் தென்திசைக்கு எத்திசையும் இணையாக மாட்டாது என்று எடுத்து விளக்கினார் உபமன்னிய முனிவர்.

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை, உபமன்னிய முனிவர் எவ்வாறு ஆலால சுந்தரர் வன்றொண்டரான வரலாற்றினை ஆதாரமாகக் கொண்டு பாடினார் என்பது ஒன்று. உபமன்னிய முனிவர் நாயன்மார்களுடைய வரலாற்றை உரைத்த வண்ணம் இப்போது நான் ஆசையினால் பாடத் தொடங்குகின்றேன் என்பது சேக்கிழார் நாயனாரே தரும் வாக்காகும். அதனைப் பின்பற்றி பெரியபுராணம் பாடுவதற்கு பின்னணியாகத் திகழ்வது வன்றொண்டர் ஆரூர்ப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியருளிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம். இது இரண்டாவது கதை அதுவும் அருண்மொழித்தேவர் அருளிய அரிய உண்மையேயாகும்.

***"என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை***
***அன்று சொன்ன படியா லடியவர்***
***துன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி***
***இன்றெ னாதர வாலிங் கியம்புகேன்"(47)***

திருத்தொண்டத் தொகை மெய்ப் பதிகத்தில் வணக்கப்பெற்ற நாயன்மார்களை நமது நாதனாகிய நம்பியாண்டார் நம்பிகள் மனமகிழ்ந்து போற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியை வகை நூலாக வழிக் கொள்கின்றேன் என்பது தெய்வாம்சம் மிக்க சேக்கிழாருடைய திருவாக்கு. உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும் திருவருள் திருவணைப்பினால் இயற்றப் பெற்ற பெரியபுராணம் பிறந்த மூன்றாவது கதையாகக் கொள்ளலாம். கொள்ளா மறுத்தாலும் தள்ளிவிடவும் ஒண்ணாது.

***அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை***
***நந்த நாதனா நம்பியாண் டார்நம்பி***
***புந்தி யாரப் புகன்ற வகையினால்***
***வந்த வாறு வழாம வியம்புவாம் (49)***

இன்னும்,

ஆரூர்ப்பெருமான் நம்பியாரூரருக்கு அம்பலவர் திருக்கூட்டச் சிறப்பை "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் மடியேன்" என்று அடி எடுத்துக் கொடுத்துத் திருவாய் மலர்ந்தருளினார். அச்செந்நெறி சேவித்துச் சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கூட்டத்தவரைப் பதினொரு திருப் பாடல்களால் பாடிப் பரவிப் பணிந்தார்.

அத்திருந்தொண்டத்தொகைத் திருப்பதிகத்திற்கு திருநாரையூர் தும்பி முகர் நம்பியாண்டார் நம்பிக்கு பொருள் புலப்படுத்தி வைத்தருளினார். அப்பொருள் புலப்படுமாறு நம்பியாண்டார் நம்பிகள் ஏறத்தாழ எண்பத்தைந்து திருப் பாடல்களால் திருத்தொண்டர் திரு வந்தியைப் பாடியருளினார். இதுவும் பெரியபுராணம் பிறந்த கதைகளில் ஒன்று எனலாம்.

**(அவ்வுண்மையச் சேக்கிழார் வாக்கு (49) மெய்ப்பிக்கும்.)**

மேலும் பெரியபுராணக் கரு திருவருளால் உருப்பெறுவதற்கு, ஆடரவாட நின்று ஆடுவார், "உலகெலாம் நின்று அசரீரி வாக்கால் அடியெடுத்துக் கொடுத்தருளினார் இதுவும் பெரிய புராணம் தோற்றும் கதைகளில் ஒன்றெனலாம்.

மேலும் சிவபெருமான் உமா தேவியாருக்கு உபதேசித்த வரலாறு சிவரகசியத்துள் ஒன்பதாவது காண்டத்தில் உளது என்பர் உணர்வுடையோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெரியபுராணம், திருவருள் குருவருள், பெருவருளால் பெருக்கெடுத்த ஞானப் பேராற்று நூல்.

பெரியபுராணம் பேரருளியல் பிறந்து திருவருளில் திழைத்து குருவருளில் குளித்து ஞானவருளில் நடந்த நூல் என்பதனை பல மேற்கோள் மூலம் விளக்கினோம்.

சுருங்கச் சொல்லின் பின்வருமாறு பெரியபுராணம் பேசப் பெறும்.

பெரியபுராணம்

சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த வரலாறு.

உபமன்னிய முனிவர் தவமுனிவருக்குச் சாற்றியது.

தியாகேசப் பெருமான் ஆளுடைய நம்பிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்தது.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிதளுக்கு உணர்த்தியது.

அம்பலவாணப் பெருமான் சேக்கிழாருக்கு "உலகெலாம்;" என ஓதியது.

பதினொரு திருமுறைகளை உறுப்பாகவும் உயிராகும் உடலாகவும் கொண்டு நல்லடியார் நடந்தது.

சேக்கிழார் பெருமான் சோழ அரசருக்குச் சொல்லியது.

இவ்வாறான அருமை பெருமை திறமைமிக்க பெரியபுராணத்தின் சிறப்பு இவ்வளவு என்று எவராலும் அளவிடுதற்கு அரிது. அவ்வுண்மையை, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் வெளியிட்ட பெரியபுராணத்திற்கு மதிப்பிற்குரிய கு.சுந்தரமூர்த்தி,எம்.ஏ வழங்கிய ஆராய்ச்சியில் காட்டியுள்ள கருத்து நல்ல சான்றாகும்.

1. பன்னிரண்டாம் திருமுறை எனப் பே... பெறும் இப்பெரியபுராணம் உயிர்கள் பெற வேண்டிய பெரும் பயனை எடுத்து நுவலுதலின் ஒரு ஞான நூலாகும்.

2. இறைவனை வணங்குதற்குரிய நால் வகை நெறிகளையும் எடுத்து இயம்பலின் இஃது ஒரு வழிபாட்டு நூலாகும்.

3. உலகியல் வாழ்வில் இல்லறம், துறவறம் ஆகிய இரு நெறிகளிலும் நின்று வாழ வேண்டிய முறைகளைக் கூறுதலின் இஃது ஒரு வாழ்வியல் நூலாகும்.

4. இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மைகளையும் வேண்டுமிடத்தெல்லாம் வரித்துரைத் திருத்தலின் இஃது ஒரு மெய்கண்டசாஸ்திர நூலாகும்.

5. முன்னோர் மொழிப் பொருளையும் கல்லெழுத்துச் சான்றுகளையும் கருவியாகக் கொண்டு விளக்குதலின் இஃது ஒரு வரலாற்று நூலாகும்.

6. உவம உருக அழகு சொல்லடுக்குகள் இயற்கை வருணனை இலக்கண நுட்பம் முதலியவற்றை ஆங்காங்கு எடுத்துக் காட்டுதலின் இஃது ஓர் இலக்கிய நூலாகும்.

7. மூவர் அருளிய திருமுறைகளில் காணும் திட்ப நுட்பங்களை ஆங்காங்கு விரித்து உரை செய்திருத்தலின் இஃது ஒரு ஞான விரிவுரை நூலாகும்.

பெரியபுராணம் பெருங்கதை என்பதற்கு இதற்கு மேலும் ஒரு சான்று வேண்டுமோ தான்.

**"தெய்வச் சேக்கிழார் வாழ்க**
**தெய்வீகத் தமிழ் வாழ்க"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 25



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

**40. வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய கதை**

வரகுண பாண்டியன் செங்கோலோச்சி வருங்காலத்தில், ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். வேட்டை ஆடிவிட்டு அதிகநேரம் கழித்துப் பாண்டியன் குதிரையில் ஏறி மதுரைக்குத் திரும்பினான். குதிரை விரைவாகச் சென்றமையால் வழியில் படுத்திருந்த பிராமணனைக் காலால் மிதித்துக் கொன்றுவிட்டது. இதனை அறியாத பாண்டியன் தன் அரண்மனையிற் சென்றான். இறந்த பிராமணனுடைய உடலை, அவனுடைய உறவினர்கள் பாண்டியனின் கடைத்தலை வாயிலிற் போட்டு நிகழ்ந்தவற்றைக் கூறப் பாண்டியன் அவர்களுக்கு வேண்டும் பொருளைக் கொடுத்து இறந்த பிராமணனின் இறுதிக்கிரியைகளைச் செய்யும்படி அனுப்பினான். எனினும் பாண்டியனை பிரமகத்தி தோஷம் பிடித்தது.

வரகுணபாண்டியன் தன்னை வருத்தும் பிரமகத்தி நீங்கும் பொருட்டு, புரோகிதங்கள் விதித்தபடியே பிராமண போசனம் செய்வித்து அரசமரத்தை பிரதட்சணம் செய்தும், அறுகம்புல்லு பசுக்களுக்கு கொடுத்தல் போன்ற பல செய்தும் பிரமகத்தி நீங்காது நெய் சொரிந்த அக்கினிபோல அது பாண்டியனை வருத்தியது. பாண்டியனது வருத்தம் கண்ட பிராமணர்கள் பாண்டியனை சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்தை நாள்தோறும் ஆயிரத்தெட்டு முறை வலம் வந்தால் பிரமகத்தி நீங்கலாம் என ஆலோசனை கூறினார்கள்.

பாண்டியன் திருக்கோயிலை அடைந்து எம்பெருமானே! நீர் இந்திரனுடைய பழியை நீக்கி அருளினீர். பிராமணனின் மகாபாதக்கை தீர்த்தருளுனீர். தமியேனுடைய பழியைம் தீர்த்தருள வேண்டும் என விண்ணப்பம் செய்து அடியற்ற மரம்போல வீழ்ந்தான். பின் எழுந்து பிராமணர் கூறியபடியே ஆயிரத்தெட்டு முறை ஆலயத்தை பிரதட்சணம் செய்து வணங்கினான். அப்பொழுது ஆகாயத்தினின்றும் "கேளாய் பாண்டியனே! ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அஸ்வமேதயாக பலம் கொடுப்பது பிரதட்சணம். அத்துணைச் சிறப்புடைய பிரதட்சணம் ஆயிரத்தெட்டுச் செய்துள்ளாய் இதனால் நாம் மிக மகிழ்ந்தோம் இனி நீ அஞ்சாதே. சோழரசன் உன்னோடு போர் செய்ய வருவான். நீ அவனோடு எதிர்த்து அவனை எட்டிப் பிடிப்பதுபோலப் பின்னாலே துரத்தும் பொழுது, நம்மை நாம் பூசித்துக் கொண்டிருக்கும் தலமாகிய திருவிடை மருதூரிலே போய்ச் சேருவாய். அங்கே உன் பிரமகத்திப் பழியை நீக்கி யருள்வோம்" என ஓர் அசரீரி கேட்டது. பாண்டியன் மகிழ்ச்சியுடன் தன் அரண்மனைக்குச் சென்றான்.

சில நாட்கள் கழிந்தன.சோழன், பாண்டியனோடு போர் செய்ய விரும்பித் தன் படைகளோடு சென்று பாண்டிய நாட்டை முற்றுகையிட்டான். இதனை அறிந்து சேனையுடன் சென்று சோழனை எதிர்த்தான். சோழன் புறமுதுகிட்டு ஓட பாண்டியனும் துரத்திக் கொண்டோடும் போது பாண்டியன் காவேரி அடைந்து நீராடினான். பின்னர் காவேரிக்கருகிலுள்ள திருவிடை மருதூர் கோயில் கிழக்கு வாசலைத் தாண்டி உள்ளே செல்லுதலும் பாண்டியனைப் பிடித்த பிரமகத்திப் பழியும் பாசமும் புறத்தே நின்றுவிட்டன. பாண்டியன் உள்ளே சென்று சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து நீண்டநேரம் தொழுதான். அப்பொழுது சிவபெருமான் "பாண்டியனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பிரம சாயை கீழை வாயிலேயே நிற்கின்றது. ஆதலால் நீ அந்த வழியால் போகாது மேற்கு வாசல் வழியே போய் நம் மதுரையை அடை என அருளினார். பாண்டியன் அதுகேட்டுச் சிவபெருமானை பிரியமுடியாதவாறு அடிக்கடி வீழ்ந்து வணங்கி மேலை வாயிலால் வெளியே வந்து சில திருப்பணிகள் செய்து மதுரையை அடைந்தான்.

பாண்டியன், சோமசுந்தரப் பெருமானின் அருளால் தன்னைப் பிடித்த பிரமகத்தி விலகியதை நினைந்து நினைந்து தினம்தோறும் எம்பெருமானை வணங்கி செங்கோலோச்சி வந்தான். அப்படி இருக்கும் காலத்தில், ஒருநாள் வேதம், ஆகமம், புராணம், மிருதி எல்லாவற்றிலும் சிறந்தது சிவலோகம் என்பதை அறிந்தான். அதனால் சிவலோகம் காணவேண்டும் என்ற பேராவல் பாண்டியனை உந்தித்தள்ள அவன் திருக்கோவிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி எம்பெருமானே! உமது சிவலோகத்தில் எழுந்தருளி இருப்பதை தமியேன் வணங்க ஆசை கொண்டேன் என்று விண்ணப்பம் செய்தான். எம்பெருமான் அதற்கு இசைந்து தம் உலகை அங்கு அழைத்தார். சிவலோகம் கோடி சந்திரர்கள் பேரொளி பரப்பியது போலக் காணப்பட்டது.

சிவபெருமான் திருநந்தியந் தேவரை அழைத்து நமது மெய் யன்பனாகிய வரகுண பாண்டியனுக்கு நமது உலகத்தைக் காட்டு எனப் பணிதார். அவ்வாறு நந்தியந்தேவர் பாண்டியனை அழைத்துச்சென்று நதிகள், ஆறுகள், பொற்றாமரைத் தடாகங்கள், கோபுரங்கள், மதில்கள், வீதிகள், தேவர்கள் திக்குப் பாலகர்கள், விட்டுணபுரம் இவ்வாறு பலவற்றையும் காட்டினார். பின்னர் சிவனடியார்களைப் பிரம்பினாற் சுட்டிக்காட்டிச் சிவனடியாரின் பெருமை களைக் கூறத் தொடங்கினார்.

சூரியன் உதிக்குமுன் எழுந்து நீராடி நித்திய கரும விதிகளை முடித்துக்கொண்டு, (சந்தியாவந்தனம்) சிவபெருமானுடைய திருக்கோயிலை திருவலகிடுதல், நந்தவனப்பணி, மலர் கொய்தல், மாலை தொடுத்தல், சுகந்த தூபமிடுதல், திருவிளக்கேற்றல் தோத்திரம் பாடுதல், சிவபெருமானுடைய திருப் புகழைக் கேட்டல் முதலிய தொண்டு களைச் செய்து சிவசாலோக்கிய பதத்தைப் பெற்றவர்கள். புட்பம், சந்தன, தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது, உபகரணங்களை வைத்துக் கொண்டு பஞ்சசுத்தி செய்து சிவலிங்கப் பெருமானை சிவகாம விதிப்படி மெய்யன்புடன் பூசை செய்து சிவசாமீப்பிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். மூலாக்கினியை வாயினால் எழுப்பிப் பிரமாந்திரம் வரையும் கொண்டுபோய் அங்குள்ள சந்திர மண்டலத்தை இளகப்பண்ணி அதினின்றும் இடைப்பிங்கலை சுழுமுனை நாடிவழியாக ஒழுகும் அமுதத்தை உண்டு சிவ பெருமானை புருவ நடுவில் தியானித்துச் சிவசாரூப்பிய பத்ததைப் பெற்றவர்கள். இருபிறப்பாளர்களாகி யாகங்களைச் சிவபெருமான் பொருட்டு செய்தவர்கள் இவர்கள். அவர்கள் பயனையும், புகழையும் குறியாமல் தண்ணீர்ப் பந்தல் வைத்தல் முதலிய தருமங்களைச் செய்தவர்கள் இவர்கள். வேத விதிப்படியும், ஆகம விதிப்படியும் வீபூதிருத் திராட்தாரணமும் ஸ்ரீ பஞ்சாட்சர செபமுஞ் செய்தவர்கள் இவர்கள். வீபூதிருத்திராட்சம் தரித்தவர் யாவரே ஆயினும் அவருடைய குணத்தையும், குலத்தையும் பாராது அவரைச் சிவபெருமானாகவே பாவித் தவர்கள் இவர்கள்.

இவ்வாறு சிவலோக்தில் இருந்த சிவனடியார்களை வகைப்படுத்திக் காட்டினார் நந்தியந்தேவர். வரணகுண பாண்டியன் அவர்களை எல்லாம் வீழ்ந்து வணங்கி அஞ்சலி செய்து வர அழைத் துக்கொண்டு சர்வலோக நாயகராகிய சிவபெருமான் முன்பு விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் ஆகமும் வடிவெடுத்து இரு பக்கமும் நின்று வாழ்த்தத் தும்புருநாரதர்கள் இசைபாடத் தேவ அரம்பையர்கள் கூத்தாட, தேவர்கள் குறைவேண்டக் சமயம் பெறாது ஒரு பக்கத்து ஒதுங்க நிற்ப, விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர் வணங்கி நின்று ஏவிய பணிகளை கேட்ப, பிரமா விட்டிணு வாய்பொத்தி, ஆடை ஒதுக்கி ஒதுங்கி நின்று தத்தம் குறைகளை முறையிட அட்டதிக்குப் பாலகர்கள் தத்தம் காரியங்களின் குறைகளை நடுக்கத்துடன் முறையிட அமரர், சித்தர், பதினெண் கணங்களும் துதிக்க முனிவர், அசுரர் அரகர சிவசங்கர சிவ சிவ என்றேத்த ஆயரம் சூரிய பிரகாசமுள இரத்தின சிங்காசனத்தின்மீது சிவபெருமான் எழுந்தருளி இருப்பதைக் கண்ட வரகுணபாண்டியன் கீழே வீழ்ந்து வணங்கினான். உரைதடுமாற உரோமஞ் சிலிர்ப்ப சிவபிராணது திருவருள் நதியில் மூழ்கி கண்ணீர் சொரிய, நாக்குக்குமுற, இவ்வாறு துதிப்பானாயினான்.

*"நாயினேன் என்னை நடுங்கும் பழியகற்றி*
*தாயினேராகித் தலையளித்தாய் தாள்சரணம்*
*சேயினேன் காணச் சிவலோகம் காட்டிப்பின்*
*கோயினேர் நின்றவருட்குன்றேநின் தாள்சரணம்*

*மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்னரகிற்*
*றாழாத்டியனேற் கன்புருந்தாய் தாள்சரணம்*
*ஏழாகி நான்கு வகை யெழுபிறப்பும்*
*பாழாகஎன்னை பணிகொண்டாய் தாள்சரணம்*

*வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கி*
*திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய் நின்தாள் சரணம்*
*அங்கட் சிவபுரமுண்டன் புடையார்க் கெண்பதையின்*
*றெங்கட்கு காட்டியிசை வித்தாய் தாள்சரணம்"*

இப்படி வரகுண பாண்டியன் துதி செய்து சோமசுந்தரப் பெருமானுக்குப் பூசை முதலியன செய்து செங்கோலாச்சி செவ்வனே நடாத்தினான்.

இவ்வாறு சொல்லிய அகத்திய முனிவரை ரிஷிகள் வணங்கி இந்திரன், பிரமன் முதலியோரின் பழிகளை மதுரையில் நீக்கிய சிவபிரான், ஏன் வரகுணபாண்டியனின் பழியைத் திருவிடை மருதூரில் தீர்க்க வேண்டுமெனக் கேட்டபோது, "முனிவர்களே" சோமசுந்தரக் கடவுள் புண்ணிய மூர்த்தி ஆதலால் தமது மதுரையில் அடியார்கள் வேண்டியபடியே பாதகங் செய்து கெட்டுப்போகாது வரகுணபாண்டியனின் பழியை திருவிடை மருதூரில் நீக்கினார். அதனால் மதுரை மாநகரம் தனக்குத் தானே நிகரானது என அருளினார் அகத்தியர்.

உங்கள் அபிமான
"அருள் ஒளி"
கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15-07-2008இல் வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அஞ்சலி நிகழ்வின்போது வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ ஜெ. விஸ்வநாதன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்

இன்று நாங்கள் எம்மத்தியில் வாழ்ந்து மறைந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலின் அறங்காவலராக, தலைவியாக, தான் சார்ந்த சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றி மறைந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தக் கூடியுள்ளோம். "பணியெல்லாஞ் சிவபணியாக்கிடல் இன்பமே" என்ற நற்சிந்தனை வழி நின்று இந்துக்கோயில் எவ்வாறு அமைய வேண்டும், கோயில் நிர்வாகம் எப்படி அமையவேண்டும் என்பதன் வரை விலக்கணத்தை நடைமுறையில் நடாத்திக் காட்டியவர் அன்னனையவர். கோயில் நிர்வாகம் தம்மிடம் சேரும் பொருளைச் செலவு செய்யும் பொது மூன்று விடயங்களில் சமநிலை பேண வேண்டியது அவசியம்.

1. ஆலயத்தை சிறந்த முறையில் பேணுதல், நித்திய நைமித்திய பூசைகள், மகோற்சவங்கள் ஒழுங்காக நடைபெற ஆவண செய்தல்.

2. ஆலயங்களில் சேவையாற்றத் தகுதி வாய்ந்த, சாஸ்திர, தோத்திர பொரு ளுணர்ச்சி பெற்ற, மக்களுக்கு ஆறுதல்கூறி நல்வழிப் படுத்தக்கூடிய குருமார்களையும், சமய தத்துவங்களையும் வாழ்க்கை முறையையும் போதித்து மக்களை ஆன்மீக வழிப்படுத்தக்கூடிய சிவாச்சாரியார்களை உருவாக்குதல்.

3. சமூகத்தில் நலிந்தவர்களை இனங் கண்டு ஆதரவற்றோருக்கு அபயகரம் நீட்டி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர உதவுதல்.

சைவ சமூகத்தில் தான் நிருவகித்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை இதற்கொரு முன்மாதிரியாக ஆக்கி மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் சமநிலை பேணுவது நடைமுறையில் சாத்தியமே என செயல் முறையில் நிறுவிய பெருந்தகை அன்னை அவர்கள்.

அன்னையவர்களை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் வியக்க வைத்தது அவர் பராமரித்த "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்று "உ"க்களும் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கிடைக்கவேண்டுமென அவர் மனதில் உதித்த எண்ணக்கருவின் வெளிப்பாடே இம் மகளிர் இல்லம்.

***"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள்
மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும்
உறையுளும் அல்லது கண்டது இல்"***

என மணிமேகலையில் ஆபுத்திரனோடு மணி பல்லவமடைந்த கதையின் வரிகளே நினைவுக்கு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நிலவிவரும் போர்க்காலச் சூழ்நிலையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ எல்லையில் அம்மன் கோயிலும், மகளிர் இல்லமும் அமைந்திருந்தபோதும் எல்லைக்காளியாய் ஆதரவற்ற சிறுமிகளை காத்து நின்று பிறிதோர் உயிருக்கு வந்த துன்பத்தை தனக்கு வந்ததுபோல் கருதி அபயகரம் நீட்டிய அன்னையைப் போற்ற வார்த்தைகளின்றித் திகைக்கின்றேன்.

*"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்*
*தம் நோய் போல் போற்றாக் கடை"*

ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு வசதி களையெல்லாம் குறைத்துக் கொள்கின்றானோ அதற்கேற்ற ஆன்மீகச் செல்வந்தனாக உயர்ந்து விடுகிறான். உலக மக்களால் நேசிக்கப்பட்ட மகாத்மா காந்தி, அன்னை திரேசா, ரமண மகரிஷி, பகவான், இராமகிருஷ்ணர், சாரதாதேவி, யோகர் சுவாமிகள் போன்றோர் வாழ்க்கை வசதிகளை, சுகபோகங்களை புறக் கணித்தவர்கள். அதே போன்று சிவத்தமிழ்ச்செல்வி அன்னை அவர்களும் எளிமையான வாழ்வை விரும்பி நோற்றார்.

அன்னையும் ஒரு பெண். அன்னை நிர்வகித்த ஆலயதின் தெய்வமும் பெண் வடிவினள். தாயின் தன்மையுடைய காளித்தாயை, துர்க்கை அம்மனை வழிபடுவது மிக எளிது. பெற்றவளோடு பிள்ளை நெருங்கிப் பழகுவதற்கு சட்டதிட்டம் ஒன்றும் கிடையாது. தேவையுமில்லை. சாஸ்திர விதிப்படி உபாசனை பண்ணத் தெரியாதிருப்பது பற்றி பக்தன் கவலைப்பட வேண்டிய தில்லை.

*"தந்திரமறியோம், முறைசெய் மந்திரமறியோம்*
*மிகு தவங்களோடு தேசு மறியோம்*
*தண் மலரெடுத்து உனதடியில் அர்ச்சிக்க அறியோம்*
*சிந்தையுறு பக்தியாய்ப் போற்றவு மறியோம்*
*செந்தமிழை ஓதவு மறியோம்*
*சித்தம் வைத்து எமைக் காப்பது*
*உந்தனுக்கு கடனேயம்மா!"*

1995ஆம் ஆண்டு ஊரைவிட்டு அனைவரும் ஓட வேண்டிய சூழ்நிலையில் தாய்ப்பூனை தன் குட்டிகளைக் காவுவதுபோல் பொறுப்பேற்ற ஆதரவற்ற குழந்தைகளை, சிறுமிகளை இடம் மாற்றி காவித்திரிந்த அன்னையின் கருணை அம்மன்தான் அன்னையின் உருவில் அவதரித்துள்ளாளோ என மலைத்தேன்.

கோயில் வளாகத்தில் மகளிர் இல்லம், அன்ன சத்திரம், அறநெறிப் பாடசாலை, திருமுறை மடம், தீர்த்தக் கேணி, நூலகம், பிறந்தநாள் அறநிதியம், நூல் வெளியீடு, அச்சகம் என் எண்ணி லடங்கா சேவைகளை தன் இறுதி மூச்சுவரை ஊக்கமுடன் செய்துவந்த அன்னையின் புகழை நினையாத நாளெல்லாம் பிறவா நாளே.

அவர் காட்டிய கருணைமிகு பாதையில் நாம் அவர் நிலைபெற வைத்த சமூகத் தொண்டுகளை தொய்வடைய விடாமல் தொடர வைப்பதே அவருக்கு ஆத்மதிருப்தி தரும் என்பதை என்றும் மறவா திருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுபேறு தரும் ஈழத்துச் சிதம்பரம்

திரு. K.K சுப்பிரமணியம் அவர்கள்
காரைநகர்

மாதங்களில் நான் மார்கழி ஆகின்றேன் என்று கண்ணன் கீதையில் கூறுகின்றான். இராமபிரானுக்கும் விருப்பமான பனிக்காலம் இந்த மார்கழி மாதமே.

சிவனருளைப்பெற நல்லவழி என்று மார்கழி மாத நிராடல் கருதப் படுகின்றது. இம் மார்கழி மாத நீராடல் விரும்பப் பட்ட பயன் பொதுவும், சிறப்புமாக இரு வகைப்படும். திருவெம்பாவையில் பராசக்தியைப் பாராட்டி மழையை முன் நிலைப்படுத்தி

*"முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே*
*என்னப் பொழியாய் மழையேலோரெம் பாவாய்"*

என்று கன்னிப் பெண்கள் வேண்டுகின்றனர். மார்கழி நோன்பின் சிறப்புப் பயன் கன்னியர்கள் சிறந்த கணவனைப் பெறுதல் ஆகும்.

*"உன்னடியார் தாள் பணிவோம்*
*ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங் கணவராவார்"*

எனவும் சிவனடியார்களையே கணவராகப் பெறவேண்டும் என்ற அவர் தம் விருப்பம் புலனாகும்.

மனித வாழ்க்கைக்கு இன்றி யமையாத நூல்கள் மூன்று. ஒன்று உலகியல் நூல், திருக்குறள் மற்றொன்று, பக்தி நூல் திருவாசகம், இன்னொன்று சாஸ்திர நூல் சிவஞானபோதம். இதில் திருவாசகத்தை மேல்நாட்டறிஞர் ஜி.யு.போல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமையால் இந்நூல் உலகிற்குரிய ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது.

மணிவாசகர் சொல்ல, சிவ பெருமானே விரும்பி வந்து தம் கைப்பட எழுதிய சீர்மிகு திருவாசக நூல், சிவ பெருமான் உள்நின்று உணர்த்த அதன் பிரதிபலிப்பாக உண்டான வாக்கே திரு வாசகம். ஊனையும் உள்ளத்தையும் உருக்குகின்ற தெள்ளுதமிழ்த் தெய்வ நூலாகும். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். திருவாசகத்தைப் படிக்கப் படிக்கத் தேன் சொட்டும் வாசகங்களாக உள்ளது. திருவாசகம் எனும் பெருநீர் என்றும் அன்பிலார் உள்ளத்து அது புகாது.

இப்படியான திருவெம்பாவை உற்சவம் 01-01-2009 ஆரம்பமாகிறது. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும். காரைநகர் திண்ணைபுரம் சிவன்கோவிலில் இத்திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நடராசப் பெருமானது வடிவத்தில் தூக்கிய திருவடியே முதன்மையாகக் கருதப் படுகின்றது. பத்து நாட்களும் எம் பெருமான் முன்னிலையில் மணிவாசகப் பெருமான் எழுந்தருளி காலை 9-00 மணிக்கு திருவெம்பாவை ஓதப்படும் இலங்கையின் இலட்சக்கணக்கான பக்தர்களும், புலம்பெயர்ந்த பக்தர்களும் இத்திருநாளில் எம்பெருமானைத் தரிசிக்க காரைநகருக்கு வருகை தருவார்கள். ஒன்பதாம் நாள் பஞ்சரதப் பவனி நடைபெறும் ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் இழுக்கும் பஞ்சரதங்கள். இதனால் இப்பெருவிழா மக்களிடையே வேறுபாடுகள் நீங்கி அவர்கள் ஒன்றுபடுவதற்கு துணையாகின்றது. ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுகின்ற இத்தலத்தில் நடைபெறும் திருத்தேர்களினது பவனி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மறைந்த சிவத்தமிழ்ச்செல்வியின் அபிமானக் கோயில் ஈழத்துச் சிதம்பரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 10-01-2006 அன்று வெள்ளோட்டம் விடப்பட்ட நடராஜர் தேரானது சிவனின்108 தாண்டவங்களையும், 63 நாயன்மார்களின் சரித்திரங்களையும் சிறப்பாக செதுக்கப் பெற்றிருப்பதை காணக் கண்கள் கோடி வேண்டும். இங்கு நடேசர் அபிஷேகமும் விடியற்காலை ஆருத்ரா தரிசனமும் நடைபெறும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமையப் பெற்ற தலம் ஈழத்துச் சிதம்பரம். இவ்வாலயத்தை ஸ்தாபித்தவர் அம்பலவி முருகர் எனும் சிவனடியார். இன்றுவரை இவ்வாலயமானது இப்பெருந்தகையின் வழித்தோன்றல்களாகிய ஆதீன கர்த்தாக்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது அத்துடன் திரு உத்திர கோச மங்கையில் இருந்து வந்த சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் வழித் தோன்றல்களால் இன்றும் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானின் பேரழகுமிக்க திருமூர்த்தம் கி.பி. 1770ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அமைக்கப் பெற்றது. இங்கு ஈழத்தில் எங்கும் இல்லாதவாறு சிவனுக்கும், ஐயனார் பெருமானுக்கும் தனித்தனி இராஜ கோபுரங்கள் உள்ளமை கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாலயத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் ஈழத்தில் எக்கோயிலிலும் இல்லாதவாறு அமையப்பெற்ற பெரிய தேரோடும் மூன்றாம் வீதியாகும். இவ்வாலயம் சுமார் 400 பரப்பு விஸ்தீரண நிலத்தை தன்னகத்தே கொண்டது. இங்கு மணிவாசக மடாலயம், தங்கம்மா நடராஜா மடாலயம் ஆகியவற்றால் விஷேட தினங்களில் சிவனடியார்க்கு அன்னதானம் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். அது மட்டுமின்றி யாத்திரிகர்கள் தங்குவதற்கான வசதிகளும் உள்ளன.

கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களால் 1940ஆம் ஆண்டு ஆரம்பித்த மணிவாசகர் சபையினரால், திருவாசக முற்றோதலும் சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் இத்திருவெம்பாவை பத்து நாட்களில் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் இச்சபையினால் ஆண்டு தோறும் மணிவாசகப் பெருமான் பற்றிய போட்டி நிகழ்ச்சிகள் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுவதும் சிறப் பம்சமாகும்.

இவ்வாலயத்தில் புதிதாக நிர்மாணிப்பட்ட அறப்பணி நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக 14-12-2003 அன்று திருவாவடுதுறை குருமகாசந்நிதானம். சீர்வளர் சீர்சிவப் பிரகாச சுவாமிநாத தம்பிரான் அவர்கள் காலஞ்சென்ற அமைச்சர் மகேஸ்வரன் அவர்களின் அழைப்பினை ஏற்று வருகை தந்தமை சிறப்பம்சமாகும். இவ் அறப்பணி நிலையம் 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்துசமய விவகார அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டது. இக்கட்டிடம் சிறந்த கலை அம்சம் பொருந்தியதாகவும் ஈழத்திலே தனித்துவம் மிக்கதாகவும் விளங்குகின்றது. இவ் அறப்பணி நிலை யத்தில் நித்திய அன்னதானம் நடை பெறுகின்றது.

எம்பெருமானாம் ஈழத்துச் சிதம்பரநாதனின் இவ்வருட திருவெம் பாவை விழாவுக்காக அடியவர்கள் எல்லோரும் இப்போதே எம்பெருமான் ஆலயம் நோக்கி செல்லத் தொடங்கி விட்டனர்.

இப்புனித மார்கழி நாளிலே சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வணங்கி எல்லோரும் அருள் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத்தின் ஆசை போய்விடேன் என்குதே

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

இஃது ஒரு சித்த புருடரின் சிந்தனையின் வெளிப்பாடு. எந்தத் துறை சார்ந்த கல்விக்கும் நூல் இன்றி அமையாதது. தொன்று தொட்டே நூலகங்கள் இருந்தன. இதைக் காஞ்சிப் பெரியவர் சரசுவதி பண்டாரம் எனக் குறிப்பிடுகிறார். அன்றே பகை மன்னர் ஒரு நாட்டை அழிக்கும்போது நூலகங்களையும் அழித்தனர். அறிவு சூனியமாய்ப் போகட்டுமென மொழி, மதம், இனம் நாடுபேதமின்றி நூல்கள் கல்விக்குக் கருவூலமாய் அமைந்தன. சரபோசி மன்னன் அமைத்த சரசுவதி மஹால் இன்றும் தஞ்சையில் இருக்கவே செய்கிறது. இந்நூலின்றேற் கல்வி விருத்தியும் குன்றும் கலைமகள் கரத்தில் தாங்கியிருப்பது புத்தகம். இன்று ஏடு தூக்கும் பையன் நாளை நாடு காக்கும் தலைவன். கல்வியே கருந்தனம் கலைவாணிக்குப் பா,, என்றோர் திருநாமம் இதைக் கம்பன் சரசுவதி அந்தாதியில் பதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பல கலையும் வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி எனப் பாடியுள்ளார். இப்போ பாரதிக்குப் பஞ்சமில்லை சரசுவதிக்குத்தான் பஞ்சம். கல்வி மான்களை சச்சிதானந்த சரசுவதி, சிவானந்த சரசுவதி, சந்திர சேகர சரசுவதி என்றழைத்தனர். இப்புத்தகம் புனிதமானது. கலைமகள் கல்வியை அள்ளிக் கொட்டும் தெய்வம். சரசுவதி பூசை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் படிப்பு. படிப்பது மனம் படிய. படியாதவனுக்கு விடிவே இல்லை. குமரகுருபரர் சகலகலாவல்லியைத் தோத்திரஞ் செய்து வெற்றி கண்டார். அவர் சிந்திய சில தொடர்கள்,

*"நாடும் பொருட் சுவை சொற்சுவை*
*தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியிற் பணித்தருள்வாய்*
*அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது*
*ஆர்ந்து உன் அருட் கடலில்*
*குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ*

*தூக்கும் பனுவல் துறைதோய்ந்த*
*கல்வியும் சொற்சுவை தோய்தர*
*வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்*

தூக்கும்- ஆராயும். வாக்கு - கவிபாடும் ஆற்றல்.

*பண்ணும் பரதமும் கல்வியும்*
*தீஞ்சொல் பனுவலும் யான்*
*எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய்*

*பாட்டும் பொருளும் பொருளாற்*
*பொருந்தும் பயனும் என்பால்*
*கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்*

*சொல்விற் பனமும் அவதான*
*மும்கவி சொல்ல வல்ல*
*நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் கவிவடித்த சுவாமிகள் "விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பிலுன் போற் கண்கண்கண்ட தெய்வமுளதோ" என முத்தாய்ப்பு வைக்கிறார். இதன் நுணுக்கம் என்னை? தெய்வம் பல பேசும் அவனியிலே கல்வி நிரம்பி வழிவோர் மதிக்கப்படுவர். கல்வியின் கலை ஞானத்தின் ஆடலில் பாடலில் எல்லாம் கலைமகள் பிரத்தியட்சமாய்க் காட்சி அளிக்கிறாள். அவளே கண்கண்ட (நேருக்கு நேர் பேசும்) தெய்வம் என உணர்வோமாக. துறவு என்று வந்துவிட்டால் உள்ளத்துறவு முக்கியம் சினம் இறங்கக் கற்றாலும் கீர்த்தியெல்லாம் கற்றாலும் மனமிறக்கக் கல்லார்க்குவாயேன் பராபரமே என்பது தாயுமானவர் (திரு) வாக்கு. அறுபத்துநான்கு கலையம்சங்களிலும் தொனிப்பவள் அவளேதான். எம்மோடு நேர்நின்று பேசும் கலைமகள் எமக்கு கண்கண்ட தெய்வமேதான். தெய்வம் ஒன்றேதான் எனப் பேசினும் அநந்தகோடி தெய்வங்களையும் வழிபடும் இனமே. கல்வியே கண்கண்ட தெய்வமென குருபரர் அடித்துப் பேசினார். விண்கண்ட தெய்வம் பலகோடியுள் ஒன்றுதான் பாரதியெனின் அவளின் தெய்வ விசேடம் பிரத்தியட்சமேதான். பாரதி - சரசுவதி.

எனவே இப்போது தெரிகிறது புத்தகத்தின் தா ம் காத்திரம், கனதி துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது போல ஈற்றில் இந்தப் புத்தகப் பற்றையும் தூக்கி வீசி ஒன்றுமற்ற நிலைக்கு நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆசையின் முதிர்ச்சி பற்று இதைவிடப் பற்றற்றானைப் பற்றிக் கொள்வோம்.

***"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்***
***பற்றுக பற்று விடற்கு"***

**350 ஆம் குறள்**

பற்று இல்லாதவனாகிய இறைவனது பற்றை மட்டுமே பற்றுக. உலகப் பற்றுக்களை விடுவதற்கு அப்பற்றைப் பற்றவேண்டும். இந்த அனுபவத்தை நம்மாழ்வாரும் திருவாய் மொழியின் துவக்கத்திலேயே முன்மொழிந்துள்ளார்.

***அற்றது பற்றெனில் - உற்றது வீடுயிர்***
***செற்றது மன்னுறில் - அற்றிறை பற்றே***

**திருவாய் மொழி - 1: 2: 5**

பற்று நீங்கினால் ஆன்மா மோட்சம் பெறும். ஆக உயர்ந்த நூல் சிறந்த நண்பனாகும்.

***நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்***
***பண்புடை யாளர் தொடர்பு.***

**குறள் - 783**

இந்த நூலை மையமாக்கிச் சித்தர் தந்த புத்தகத்தினாசை ஈற்றிலே தானாய்க் கழன்றுவிடும். அனிந்த பழம் (பழுத்த பழம்) மூழ்விட்டு மரத்தில் இருந்து தானே உதிர்வது போல. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள். ஆசைதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை எனவே திருமூலர் ஈசனோடாயினும் ஆசையறுமின் ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பம் எனப் பாடினார். எனவே இந்த ஆசையை மூன்றென்றார் தாயுமானவர்

***பொன்னை மாதரைப் பூமியை நாடினேன்***
***என்னை நாடிய என்னுயிர் நாதனே***
***உன்னை நாடுவன் உன்னருள் தூவெளி***
***தன்னை நாடுவன் தன்னந் தனியனே***

**18 - பொன்னை மாதரை.**

பொன் - பணம், மாதர் - பெண்கள், பூமி - சொத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரியார் இவ்வாசையை மூவேடணையெனப் பேசுகிறார்.

*மாவேழ் சனனம் கெட மாயைவிடா*
*மூவேடணை என்று முடிந்திடுமோ*
*கோவே குறமின் கொடி தோள் புணரும்*
*தேவே சிவசங்கர தேசிகனே*

**கந்தரநுபூதி – 39.**

கோவே - உலகங்கட்கெல்லாம் அரசே. குறமின் கொடிதோள் புணரும் - குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி போன்ற வள்ளி நாயகியின் தோள்களைத் தழுவுகின்ற. தேவே - தெய்வமே. சிவசங்கரதேசிகனே - மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்பவருமான சிவமூர்த்தியின் குருநாதரே. மா ஏழ் சனனம் கெட - பெரிய எழுவகையான பிறவிகளும் தொலையுமாறு. மாயைவிடா - மாயையினின்றும் நீங்காத. மூஏடணை - மூன்று ஆசைகளும், என்று முடிந்திடுமோ - எப்பொழுதுதான் அடியேனை பற்றது அகலுமோ.

மா ஏழ் சனனம் :-
மா - பெரிய, ஏழ்சனனம், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன.

தேவர் 11 இலட்சம் கரு வேறுபாடுகள்
மனிதர் 9 இலட்சம் கரு வேறுபாடுகள்
விலங்கு 10 இலட்சம் கரு வேறுபாடுகள்
பறவை 10 இலட்சம் கரு வேறுபாடுகள்
ஊர்வன 15 இலட்சம் கரு வேறுபாடுகள்
நீர்வாழ்வன 10 இலட்சம் கரு வேறுபாடுகள்
தாவரம் 19 இலட்சம் கரு வேறுபாடுகள்
ஆக 84 யோனி பேதங்கள்.

மூவேடணை - தானேடணை, தாரேடணை, புத்திரேடணை.

தானேடணை - செல்வத்தாசை - தனம் - 1
தாரேடணை - மனைவியாசை - தாரம் - 2
புத்திரேடணை - மக்களாசை - புத்திரர் - 3

ஏஷணா - ஆசை. இது வடமொழிச் சொல். தமிழில் ஏடணை.
விளக்கம் :- திருமுருக கிருபானந்த வாரியார்.

எல்லையற்ற ஆசையின் பெருக்கத்தைத் தாயுமானவர் திருவாக்கிற் காண்போம்.

*ஆசைக்கு ஓர் அளவுஇல்லை அகிலம்எல் லாங்கட்டி*
*ஆளினும் கடல்மீதிலே*
*ஆணைசெல வேநினைவர், அளகேசன் நிகராக*
*அம்பொன்மிக வைத்த பேரும்*
*நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்*
*நெடுநாள் இருந்த பேரும்*
*நிலையாக வேஇன்னும் காயகற்பந்தேடி*
*நெஞ்சுபுண் ஆவர், எல்லாம்*
*யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்*
*உறங்குவதும் ஆகமுடியும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே*
*ஒன்றை விட்டு ஒன்று பற்றி*
*பாசக் கடற்குளே வீழாமல் மனது அற்ற*
*பரிசுத்த நிலையை அருள்வாய்*
*பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற*
*பரிபூர ணானந்தமே*

**பரிபூரணானந்தம் – 10.**

**உரை :** ஆசைக்கு - அவாவினுக்கு, ஓர் அளவு - ஓர் வரம்பு இல்லை (ஏனெனில்). அகிலம் - உலகங்கள், எல்லாம் - எல்லாவற்றையும். கட்டிஆளினும் - கட்டி அரசு செலுத்தினும், கடல் மீதில் - கடலின் மீதும், ஆணை செல - தமது ஆக்கினையைச் செல்லும்படியாக, நினைவர் - விரும்புவார்கள். அளகேசனை - குபேரனுக்கு, நிகர்ஆக - சமமாக. மிக - மிகுதியாக, அம் - அழகிய. பொன் -பொன்னை, வைத்த பேரும் - தம்மிடத்தில் வைத்திருக்கிறவர்களும், ரசவாத வித்தைக்கு, நேசித்து - விரும்பி, அலைந்திடுவர் - திரிவார்கள், நெடுநாள் - நெடுங்காலம், இருந்தபேரும் - இவ்வுலக இன்பங்களை அனுபவித்தோரும். இன்னும் - மேலும், நிலையாக - நிலைத்திருக்கும்படி, காயகற்பம் - காய்சித்திக்குரிய கற்பமுறைகளை, தேடி - நாடி (கிடைக்கப் பொறாமல்), நெஞ்சு புண்ணாவார் - மனம் புண்படுவார்கள், எல்லாம் - இவைகள் எல்லாவற்றையும், யோசிக்கும் வேளையில் - ஆலோசிக்கும் போது, பசிதீர - பசியடங்க, உண்பதும் - சாப்பிடுவதும், உறங்குவதும் ஆக முடியும் - நித்திரை கொள்வதும் ஆகவே அமையும், (ஆனபடியால்) உள்ளதேபோதும் - உள்ளதே காணும் (திருப்தி) நான் நான் எனக் குளறி - நான்நானென்று அகங்கரித்துப் புலம்பி, ஒன்றைவிட்டு ஒன்று பற்றி - ஒன்றை விட்டு மற்றொன்றைப் பிடித்து, பாசக் கடற்குளே வீழாமல் - ஆசையாகிய கடலுள் வீழ்ந்தழுந்தாமல், மனது அற்ற - மனம் இறந்த, பரிசுத்த நிலையை அருள்வாய் - பரிசுத்தமான மௌன நிலையை அருள்செய்வாய். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்த பரிபூரணானந்தமே.

*ஆசை யெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்சு எனவுமன*
*தலை யுங் காலம்*
*மோசம் வரும், இதனாலே கற்றதுங்கேட் டதுந் தூர்ந்து*
*முத்திக்கான*
*நேசமுநல் வாசமும் போய்ப், புலனாயிற் கொடுமை பற்றி*
*நிற்பரந்தோ?*
*தேசமுத் தருள்பழுத்த பராபரமே? நிராசை யின்றேற்*
*றெய்வமுண்டோ*

**24 – ஆசையெனும்.**

ஆசையெனும் - ஆசையென்று சொல்லப்படுகின்ற, பெரும் காற்றூடு - பெரிய(புயற்)காற்றில், இலவம் பஞ்சு எனவும் இலவம் பஞ்சு அலைவது போலவும், மனது அலையுங் காலம் - மனமானது அலையுங் காலத்தில், மோசம் வரும் - (ஆபத்து) நேரிடும், இதனாலே - இதனால், கற்றதும் கேட்டதும் - கல்வி கேள்விகளும், தூர்ந்து - வீணாகி, முத்திக்கு - மோட்சத்திற்கு, (ஆத்ம விடுதலைக்கு) ஆனநேசமும் - ஆதிய விருப்பமும், நல் வாசமும் - நல்ல சிவசேத்திர வாசனையும், போய் - (அற்று) இல்லாமற்போய், புலன்ஆய - ஐம்புலன்களின் வழியாகி, இல் கொடுமை பற்றி - கொடுமையான சம்சாரத்தில் வீழ்ந்து, நிற்பர் - ஆசைவலையிற் கட்டுப்படுவர், (ஆகையால்) தேசுபழுத்து - ஒளிமிகுந்து, அருள் பழுத்த - அருள் கனிந்த,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராபரமே - பரம் பொருளே, நிர்ஆசைஇன்றேல் - அவா அறுதி (முடிவு) இல்லையே ஆனால் ஒருவருக்குத் தெய்வம், உளதோ - இல்லை என்றபடி, ஆகஒருவருக்கு நிஸ் ஆசை - (ஆசையின்மை) உண்டானால் அன்றி தெய்வ உண்மை விளங்காது. புரியாது என்பதாம், நிர் ஆசை - ஆசை இன்மை, நிர்க்குணம் -குணம் இன்மை.

ஆகவே இது காறும் கூறியவற்றாற் பெறப்படுவது என்ன? ஆசை இல்லாத தூய மனத்திலே இறைவன் குடியிருப்பான் என்பதாம். ஆகவே மூன்று ஆசையும் முப்பதாம் வயதளவில் அறுத்தெறியப்பட்டால் ஒருவன் இறைவன் திருவடிஞானம் பெறுவான் இது நிச்சயம்.

*முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒரு பொருளைத்*
*தப்பாமல் தன்னுள் பெறானாயின் - செப்பும்*
*கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்*
*முலையளவே ஆகுமா மூப்பு*

ஒரு பொருள் இறைவன், மூன்று காமம், வெகுளி, மயக்கம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

*** *** ***

**உடனோடி வருவாயென் கந்தா சுகந்தா**

ஞானகுரு வான திரு முருகா நீயே
நாளுமெமைக் காத்தருளும் அழகா நீயே
கானமயில் நாதன்நீயே கந்தா சுகந்தா
கலியுகத்து நாயகனே வெற்றிவேலா
ஈனநிலை அகன்றோட இடும்பை தீர
ஈசனுமை பாலனுனைக் கண்டே பாட
தேனமுதத் தினையுண்ட செல்வா நீயே
நான் தேடுகின்ற பரம்பொருளே வருவாயையா

ஊமைதனைப் பேச வைத்த தெய்வம் நீயே
உலகளந்த மாயவனின் மருகன் நீயே
தீமைகளை அழித்து வெற்றி தருவாய் நீயே
திரிபுரங்கள் எரித்தசிவன் மைந்தா நீயே
இமையவர்கள் தொழும் தீரா ஈசன்செல்வா
ஈராறு கரங்கொண்ட ஞானபோதா
உமைதந்த அருங்கனியே ஊறு நீக்கி
உந்தனருள் ஒளிகாட்டி அருளும் நேசா

தைப்பூச ஒளிகண்டு எம்மை வாட்டும்
தடையாவும் வெருண்டோடச் செய்யும் தீரா
மைப்பூசும் திருவிழியாள் வள்ளி பாங்கா
மாதுமையாள் திருக்குமரா மாவை வேலா
எப்போதும் உனைநாடி மகிழ நல்ல
எழில்மஞ்சம் தனிலேறி உவகை கூட்டி
அப்பாவென் அழகாநீ வருவாய் ஆடி
அருள்கோடி இன்பங்கள் தருவாய் நீயே

தெல்லிப்பழை — சு. குகதேவன்

**சைவர்களின் நித்திய கருமங்கள்**

நித்திய கருமம் வாழ்வில்
நித்தமும் செய்ய வேண்டும்
உத்தம ராக வாழ
உகந்த வழியும் இதுவே
நித்திரை விட்டு அதிகாலை
நீயுமே எழுந்து கொள்ளும்
எத்தனை முறையென் றாலும்
இறைவனை நினைக்க வேண்டும்

சிவ சின்னங்கள் தரித்து
சிவனை வழிபட வேண்டும்
அவரிடம் நீங்கள் கேளுங்கள்
அனைவரும் சுகமாய் வாழ
உவந்துமே தருமம் செய்வீர்
உயரிய தொண்டும் அதுதான்
எவரிட முமன்பு கொண்டு
இனிமையாய் வாழவேண்டும்

சங்கானை. — கவிஞர். வ. யோகானந்தசிவம்

**கருணை புரியும்**

கல்லிலுருவான சிவலிங்கம்
கருணை புரியும் வண்ணம்
தெல்லிநகர் உறையும் ஸ்ரீ துர்க்கா
சோதியாய் கலந்தாளதனுள்
சொல்லில் வருபவளுமவளே செல்
வங்களுக்கெல்லாம் அதிபதியுமவளே
பில்லிசூன்ய மறுக்கும் வீரத்தாயுமவளே
அல்லலறுத்து காக்கும் அன்னை

கொக்குவில். — இராம ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையை உருவாக்கி விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய அம்மையார்

**திருமதி நவமணி ஞானலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

உலகில் தமக்காக வாழ்பவர் பலர்; தமக்கும் பிறருக்குமாக வாழ்பவர் சிலர்; பிறருக்காக மட்டும் வாழ்பவர் மிகமிகச் சிலர். அந்த வகையைச் சேர்ந்த எம் அன்னை இன்று எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி அம்பாளிடம் சரணடைந்துவிட்டார். அவர் சமயத்தையும், சமூகத்தையும் இணைத்துச் செய்த சேவை என்றும் போற்றற்குரியது. சோழர்காலத்து ஆலயங்களைப்போல பல சமூகவிருத்திகளை ஏற்படுத்திய அவர்தம் சேவை மறத்தற்கரியது. ஆலய வழி பாட்டுடன், பயன் கருதாத பணியின் நலத்தைச் சகலரும் உணர வேண்டு மென்பதே அவரின் நோக்கமாயிருந்தது.

ஆலயத்தை வழிபட வரும் பக்தர்கள் எல்லோரும் ஆத்மீக உணர்வுடன் சமய, சமூகப் பணி செய்து வாழ வேண்டுமென்ற நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டவையே பெண்கள் தொண்டர் சபையும், இந்து இளைஞர் சங்கமுமாகும். அவை சமூகத்தில் பெரியதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதென்றால் மிகையில்லை.

தன்னலம், தன் குடும்பநலம் தன் கருமம் என்ற சுயநலத்துடன் வாழ்ந்த பெரும்பான்மைப் பெண்களில் ஒரு விழிப்பை ஏற்படுத்தி ஆலயத் தொண்டு, மகளிர் இல்லப் பிள்ளைகளின் நலன் ஆகியவற்றில் ஈடுபடவைத்து எல்லோரையும் சகோதரர்களாக கருதி வாழும் ஒரு பெருஞ் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியவர் எம் அன்னை அவர்கள். 1980இல் ஏற்படுத்திய பெண்கள் தொண்டர் சபை அன்னையின் வழிகாட்டலில் பல சமய, சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது. அன்னை அவர்கள் மாதாந்தக் கூட்டங்களில் சிறந்த அறிவுரைகளை வழங்கியதுடன் திருக்குறள், பெரிய புராணம், கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களைப் பகுதி பகுதியாகப் படித்துப் பொருள் விளக்கம் கூறி அறிவுத் தெளிவை உள்ளடக்கினார். அன்றியும் சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளும் வாசித்து விளக்கமளித்தார். பெண்கள் அறிவு முதிர்ச்சி பெற்றால்த்தான் சமூகம் வளர்ச்சியடையும் என்ற பெருநோக்கு அவருக்கிருந்தது.

அன்றியும் விளையாடித் திரிந்த பிள்ளைகளைத் தொண்டர்களாக்கி, இந்து இளைஞர் சங்கத்தில் இணைத்து ஆலயத்திற்கும், சமூகத்திற்கும் பெருஞ் சேவை செய்ய வைத்தார். இன்று இந்து இளைஞர்கள் ஆலயப் பணியில் பெருந்தொண்டாற்றுகின்றனர். இவ்வாலயக் கட்டிடங்களில் பெரும் பாலானவை அவர்களின் சிரமதானப் பணியிலாலமைந்தவை என்பது மறத்தற்கரியது. இந்த ஆலயத்தில் மட்டுமல்ல சூழவுள்ள ஆலயங்களிலும் அவர்கள் சேவை செய்யத் தவறுவதில்லை. இன்று அவர்களில் பலர் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் ஆலய வளர்ச்சியிலும், பணியிலும் நாட்டங் கொண்டவர்களாகவே வாழ்கின்றனர்.

இவ்வாறு பெண்களையும், இளைஞர்களையும் பணி செய்து பயன் பெற்று வாழ வகை செய்த அன்னையின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அவர் காட்டிய, கற்பித்த வழியில் வாழ்ந்து பணிசெய்வதே அன்னையின் ஆத்மசாந்திக்குரிய செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



| புவியில் | | விண்ணில் |
|---|---|---|
| 18 | | 16 |
| 04 | | 12 |
| 1930 | | 2008 |

தெல்லிப்பழை

## அமரர் ஸ்ரீமான் சம்பந்தர் கந்தையா

**[கந்தசாமி]**

***(நிர்வாகசபை உறுப்பினர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)***

***எங்கள் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினராக விளங்கி, நிறைந்த தொண்டாற்றிய பெருந்தகையின் பிரிவு பெரும் துயர் தருகிறது. மும்மொழிப் புலமையோடு ஆலய வரலாற்றைக்கூறும் ஆங்கில நாவலை வெளியிடக் காரணமாக விளங்கியவர். எவருக்கும் உதவும் பணியோடு வாழ்ந்த இப்பெரியாரது ஆத்மா எல்லாம் வல்ல துர்க்கா தேவியின் திருவடியில் ஆறுதல் பெறப் பிரார்த்திக்கின்றோம்.***

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

நிர்வாகசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பிறந்ததின விழாவில் சில காட்சிகள்



சிறுவர் பூங்காவை திரு.திருமதி கயிலாசபிள்ளை தம்பதிகள் ஆரம்பித்து வைத்தனர்



கந்தையா நீலகண்டன் தம்பதிகள்
மகளிர் இல்லப்பிள்ளைகளுடன்



பேராசிரியர் நா. சண்முகலிங்கன்
உரையாற்றுகிறார்.




ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
உரையாற்றுகிறார்.



திரு. கந்தையா நீலகண்டன்
உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org